## <u>சேலம் மாநகராட்சி</u>

**2025ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023, அத்தியாயம் 4, பகுதி I-ன் கீழ் சேலம் மாநகராட்சியின் இயல்புக்கூட்டம் நடைபெறும்.**

---

### <u>பொருள்கள்</u>

**1)** நகராட்சி நிர்வாக இயக்குநரக கடிதம் ந.க.எண்.2459/2024/எஸ்எஸ்1, நாள்.01.02.2024ம் தேதி கடிதத்தின்படி தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்ட நிதியின் கீழ் சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம், குடிநீர் குழாய் பதிக்கும் பணிகளால் பாதிக்கப்பட்ட சாலைகள், இயற்கை இடர்பாடுகளினால் சேதமடைந்த சாலைகள் மறுசீரமைக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக சூரமங்கலம், அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை மற்றும் கொண்டலாம்பட்டி வார்டு அலுவலக பகுதிகளில் சாலை2024 – 25 ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்பட்டியல்படி மொத்தம் 18 சிப்பங்கள் உள்ளடங்கிய 384 எண்ணிக்கையிலான சாலை பணிகள் 55.563 கி.மீ நீளத்திற்கு அரசு மான்யம் ரூ.2349.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது.

அதன் அடிப்படையில் சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் உட்பட்ட கோட்டம் எண்–3,18,25,26 இல் உள்ள கல்யாணசுந்தரம் மெயின் ரோடு 2,கல்யாணசுந்தரம் காலனி அனெக்ஸ் கிராஸ் 1,தர்மா நகர் மெயின் ரோடு,மாரியம்மன் கோவில் தெரு,மாரியம்மன் கோவில் தெரு மேற்குப் பக்கம் குறுக்கு –1,பொன்நகர் கிராஸ் 6,கல்யாணசுந்தரம் கிராஸ் 11,காதர்கான் தெரு மேற்குப் பக்க குறுக்கு–2 ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்தசாலைகள் மறுசீரமைக்கும் பணி மேற்கொள்ள TURIP 2024 – 2 திட்ட நிதியின் கீழ் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.161.00 இலட்சத்திற்கு விரிவாக திட்ட அறிக்கையின் மீது நிர்வாக அனுமதி வழங்கி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்பந்தம் கோரப்பட்டதில் குறைவான தொகையை கோரிய ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.**SAV CONSTRUCTION**, சேலம் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டது.

பணியிடங்களில் ஏற்பட்ட தளஅளவுகளின் மாற்றங்களின் காரணமாகவும், வடிவமைப்பு காரணமாகவும் சில இனங்களில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் உள்ள அளவுகளை விட கூடுதலாக பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தொடர்ச்சி.,

எனவே, மேற்கண்ட மாற்றங்களுடன் இப்பணியை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் அளவு பணிகளும், அதற்கான கூடுதல் செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Providing and laying tack coat of 2kgs/10 sqm over the BT surface treated with binder using 2 kgs of bituminous Emulsion (RS) for 10square meter area including cost of bituminous binder, including labour charges for applying the required quantity of bituminous binder as tack coat manually etc., complete as per 503 of MORTH Specifications | 11364.00 | 274441.00 | 11880.56 | 285133.44 | 10692.44 |
| 2 | Earth work excavation for foundation in ordinary soil, light black cotton sandy loam and dry silt including shoring, strutting, baling or pumping out water wherever necessary and refilling the sides of foundation with excavated earth in layers of 15cm thick and depositing the surplus earth at places as directed by the departmental officers with initial lead and lift | 30.00 | 3537.00 | 226.09 | 26678.62 | 23141.62 |

தொடர்ச்சி.,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | Supplying and errecting centering to sides and soffits including supports and strutting for drainage sides and culvert body wall sides using M.S Sheets of size 90cm x 60cm and B.G 10stifened with welded mild steel angles of size 25mm x 25mm x 3mm for boarding laid over(silver oak joists) of size 10cm x 6.50cm spread at about 90cm including all labour charges and cost and conveyance of all materials to site etc. complete Complying with Standard Specification | 162.00 | 71458.00 | 427.08 | 188342.28 | 116884.28 |
| 4. | Plain Cement Concrete 1:1.5:3 (One part of Cement, one and half part of Crushed Sand (M- Sand), three coarse aggregates) using 20mm size ISS HBG metal including cost and conveyance of all materials to site and including for the mixing, laying and labour charges etc., complete as per standard specification | 376.00 | 2617460.00 | 452.13 | 3147276.93 | 529816.93 |

தொடர்ச்சி.,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5. | Supplying and errecting centering to sides and soffits including supports and strutting for drainage sides and culvert body wall sides using M.S Sheets of size 90cm x 60cm and B.G 10stifened with welded mild steel angles of size 25mm x 25mm x 3mm for boarding laid over(silver oak joists) of size 10cm x 6.50cm spread at about 90cm including all labour charges and cost and | | | 22.44 | 22051.79 | 22051.79 |
| 6 | Supply and fabrication and placing in position of TMT steel roads to required size and length as directed by the departmental officers including cost of binding wire, cutting, bending and tying with proper position etc., including cost and conveyance of all | | | 376.90 | 34056.68 | 34056.68 |
| 7 | Providing and laying in position standardized concrete Mix M-20 Grade (1:1y:3) in accordance with IS 456-2000 using 20mm and below graded hard broken granite stone jelly for all RCC items of works with minimum cement content of 325kg/ cum and maximum water cement ratio of 0.55 including admixture (Plasticiser / super plasticiser) in recommended | | | 6.11 | 47941.08 | 47941.08 |
| | **Total** | | **2966896.00** | | **3751480.82** | **784584.82** |

தொடர்ச்சி.,

மேற்படி பணியில் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் கூடுதல் அளவுகள் **2024 – 25** ஆம் ஆண்டு அதே ஒப்பந்த விலை விகிதத்திலும், மதிப்பீட்டில் இல்லாத புதிய இனங்கள் பொது பணித்துறையின் **2024 – 25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதத்திலும் பணிகள் செய்து முடிக்கப்பட்டதற்கு மன்ற அனுமதியும், இப்பணியினை செய்து முடித்தால்தான் பணி முழுமையடையும் என்பதால் அசல் ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.**SAV CONSTRUCTION**, சேலம் என்பவர் மூலம் அசல் மதிப்பீடு தொகை ரூ.**161.00** இலட்சத்திற்குள், மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இதற்கான புதிய இனங்கள் உட்புகுத்துவதன் காரணமாகவும் கூடுதலாக ரூ.**784584.82**/ திருவாளர்கள்.**SAV CONSTRUCTION**, சேலம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**(இ4/91/ஆர்/2023–24)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**2)** அரசாணை (எம்.எஸ்) எண்.**13** சிறப்பு திட்ட செயலாக்கத்துறை நாள்:**02.04.2025** இல் தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புர மற்றும் ஊரகப் பகுதிகளில் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை மேலாண்மை செய்வதில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் வகையில் தூய்மை இயக்கம் என்ற ஒருங்கிணைந்த அமைப்பு, சிறப்பு திட்டச் செயலாக்கத்துறையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் நிலையான கழிவு மேலாண்மை நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காகவும், தேவையற்ற கழிவுகளை **0**% என்ற நிலையை எய்தவும், **05.06.2025** அன்று உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு அனைத்து அரசு அலுவலகங்களிலும் தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்துதல் மற்றும் சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டது. அப்போது காகிதம், உலோகங்கள், மின் கழிவுகள் அட்டை, கண்ணாடி, மரம் மற்றும் தளவாடங்கள் போன்ற பல்வேறு வகையான கழிவுகள் கணிசமான அளவில் சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்டதின் மூலமாக அவை அனைத்தும் லேண்ட்ஃபில்– க்கு கொண்டு செல்வது தடுக்கப்பட்டது.

மேற்கண்டவாறு தூய்மை இயக்கத்தின் மூலமாக சேகரிக்கப்பட்ட பொருட்களுக்கு ஒளிவுமறைவற்ற, சமச்சீரான வகையில் நிலையான விலை நிர்ணயம் செய்வதற்காக தூய்மை தமிழ்நாடு கம்பெனி லிமிடெட் (Clean TamilNadu Company Limited) நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களின் தலைமையில், முன்னணி அரசு நிறுவன அலுவலர்களுடன் **21.07.2025** அன்று நடைபெற்ற குழு கூட்டத்தில், பல்வேறு வகையான உலர் கழிவுகள் மற்றும் மின் கழிவுகளுக்கு அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள், மற்றும் நகர்ப்புர/ கிராமப்புர உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றில் தூய்மை இயக்க நிகழ்வுகளின் போதும், மற்றும் பிற நேர்வுகளிலும் சேகரம் செய்யப்படும் பல்வேறு வகையான கழிவுகளை விற்பனை செய்திட கீழ்கண்ட அட்டவணையில் கண்டுள்ள மேற்படி குழு கூட்டத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட விலையை அடிப்படை விலையாக கொள்ள வேண்டும் என்று தூய்மை தமிழ்நாடு கம்பெனி லிமிடெட் (Clean TamilNadu Company Limited) நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடிதம் எண் 23/CTCL /**2025–2** நாள்: **06.08.2025** ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தொடர்ச்சி.,**

| S.No | Name of the Item | Proposed Rate (per kg) | |
|---|---|---|---|
| | | Rural | Urban |
| 1 | Polythene Bags | 10 | 20 |
| 2 | Plastic (Harpic, Water Bottle, PET, Broken Plastic Chairs, Toys, Watch & Clock etc...) | 10 | 10 |
| 3 | Milk Pouch | 8 | 8 |
| 4 | Oil Pouch, Food Packet, Tetra Pack-(Biscuits, Chips) | 2 | 2 |
| 5 | Cement Bags, Rice Bags, etc.., | 2 | 2 |
| 6 | Waste gunny bags (Jute bags) | 12 | 15 |
| 7 | Cardboard, carton box | 8 | 10 |
| 8 | News paper (Tamil) | 5 | 5 |
| 9 | News paper (English) | 8 | 8 |
| 10 | Used A4 sheets, old books | 15 | 15 |
| 11 | Glass bottles | 4 | 4 |
| 12 | Stainless steel (Old vessels) | 30 | 30 |
| 13 | Iron scrap (Cycle, Push Cart etc...) | 20 | 20 |
| 14 | Aluminium scrap | 45 | 45 |
| 15 | Copper (AC tubes, Wires, etc.,) | 300 | 300 |
| 16 | Brass (Taps, utensils, etc..) | 150 | 150 |
| 17 | Broken wooden furniture (non-reusable) | 5 | 5 |
| | **E-WASTE** | **Rate Per Piece (Rural)** | **Rate Per Piece (Urban)** |
| 18 | CRT Television (Box TV) | 75 | 100 |
| 19 | Refrigerator | 500 | 800 |
| 20 | Washing Machine | 300 | 600 |
| 21 | Microwave Oven | 150 | 400 |
| 22 | Mixer Grinder | 50 | 150 |
| 23 | Ceiling Fan | 50 | 150 |
| 24 | Table Fan | 50 | 150 |
| | **Name of the Item** | **Proposed Rate (per Kg)** | |
| 25 | Laptop | 250 | 500 |
| 26 | CPU | 200 | 400 |
| 27 | Mouse | 10 | 15 |
| 28 | Keyboard | 18 | 24 |
| 29 | LCD Monitor, Wall Mounted TV | 20 | 25 |
| 30 | Printer | 55 | 70 |
| 31 | Photostat Machine | 250 | 350 |

தொடர்ச்சி.,

| | | | |
|---|---|---|---|
| 32 | Iron Box | 20 | 60 |
| 33 | Motors | 50 | 100 |
| 34 | Cell phones | 40 | 80 |
| 35 | Telephones | 10 | 15 |
| 36 | Radio | 20 | 50 |
| 37 | Electric Cable (Copper Wired Cable) | 200 | 300 |
| 38 | Modem & Charger | 20 | 40 |
| 39 | Air Conditioners | 500 | 1500 |
| 40 | Inverter | 60 | 80 |
| 41 | Paper Shredder | 130 | 150 |
| 42 | Hard Drives | 20 | 60 |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள விவரப்படியான விலையை அடிப்படையாகக் கொண்டு சேலம் மாநகராட்சியில் சேகரிக்கப்படும் உலர் மற்றும் மின் கழிவுகளுக்கு விலை நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அனுமதிக்கலாம்.

**(எப்1/9270/2025)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**3)** நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் 09.10.2017 ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நோய்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக ஏடிஸ் கொசுக்களை கட்டுப்படுத்துதல், கொசு புழுக்களை கண்டறிந்து அழித்தல் போன்ற டெங்கு நோய் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ள 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் இம்மாநகராட்சிக்கு மொத்தம் 700 DBC பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய காலங்களில், நோய் தாக்கத்தின் தன்மைக்கேற்ப தேவையான எண்ணிக்கையில் DBC பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு வருகிறது.

தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கிவுள்ளதாலும் மழை காலத்தில் நீர் தேங்கி அதிக அளவில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாக வாய்ப்புள்ளது. எனவே, மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்திட கீழ்கண்ட விபரப்படி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு 100 எண்ணிக்கையிலான பணியாளர்கள் வழக்கமான தினசரி அட்டவணைப்படி கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளவும், கோட்டத்திற்கு தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 70 பணியாளர்களை கொண்டு அமைக்கப்பட்ட 14 விரைவு குழுக்கள் பொது இடங்கள், வணிக நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் முக்கிய நோய் பரவக்கூடிய பகுதிகளில் (Hot spot) குழுவாக இணைந்து சிறப்பு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், மொத்தம் 170 DBC பணியாளர்களை 01.10.2025 முதல் 28.12.2025 முடிய 89 நாட்களுக்கு சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட பகுதிகளில் பணிகளை மேற்கொள்ள பணியமர்த்த வேண்டியது அவசியமாகிறது.

தொடர்ச்சி.,

| வ.எண். | வார்டு அலுவலகம் | வழக்கமன கொசு ஒழிப்புபணி பணியாளர்கள் | விரைவு குழு பணியளர்கள் | மொத்த DBC பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | சூரமங்கலம் | 100 | 70 | 170 |
| | **மொத்தம்** | **100** | **70** | **170** |

எனவே, மேற்கண்ட விபரப்படி 170 மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களை DBC பணியாளர்களாக 01.10.2025 முதல் 28.12.2025 முடிய 89 நாட்களுக்கு அல்லது அதற்கு முன்பாக தேவைப்படும் காலம் வரையிலோ பணியமர்த்தவும், அவர்களுக்கு ஊதியமாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 01.04.2024 முதல் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.473/-வீதம் வழங்கிடவும், ஊதியம், தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதி (EPF) மற்றும் காப்பீட்டுறுதி சந்தா தொகை (ESI) ஆகியவற்றின் பணி வழங்குவோர் பங்களிப்புத் தொகை ஆகியவை உள்ளடங்கி பணியாளர் ஒருவருக்கு நாள் 1-க்கு ரூ.550/- வீதம் 89 நாட்களுக்கு 170 பணியாளர்களுக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.83.25 இலட்சத்திற்கான செலவினத்தை சூரமங்கலம் வார்டு அலுவலகத்தின் மூலம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

அனுமதிக்கலாம்.

**(எப்2/4871/2025)**

4) நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் 09.10.2017 ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நோய்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக ஏடிஸ் கொசுக்களை கட்டுப்படுத்துதல், கொசு புழுக்களை கண்டறிந்து அழித்தல் போன்ற டெங்கு நோய் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ள 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் இம்மாநகராட்சிக்கு மொத்தம் 700 DBC பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய காலங்களில், நோய் தாக்கத்தின் தன்மைக்கேற்ப தேவையான எண்ணிக்கையில் DBC பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு வருகிறது.

தற்போது வடக்கிழக்கு பருவமழை தொடங்கிவுள்ளதாலும் மழை காலத்தில் நீர் தேங்கி அதிக அளவில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாக வாய்ப்புள்ளது. எனவே, மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்திட கீழ்கண்ட விபரப்படி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு 100 எண்ணிக்கையிலான பணியாளர்கள் வழக்கமான தினசரி அட்டவணைப்படி கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளவும், கோட்டத்திற்கு தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 70 பணியாளர்களை கொண்டு அமைக்கப்பட்ட 14 விரைவு குழுக்கள் பொது இடங்கள், வணிக நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் முக்கிய நோய் பரவக்கூடிய பகுதிகளில் (Hot spot) குழுவாக இணைந்து சிறப்பு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், மொத்தம் 170 DBC பணியாளர்களை 01.10.2025 முதல் 28.12.2025 முடிய 89 நாட்களுக்கு அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட பகுதிகளில் பணிகளை மேற்கொள்ள பணியமர்த்த வேண்டியது அவசியமாகிறது.

தொடர்ச்சி.,

| வ.எண். | வார்டு அலுவலகம் | வழக்கமன கொசு ஒழிப்புபணி பணியாளர்கள் | விரைவு குழு பணியாளர்கள் | மொத்த DBC பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | அஸ்தம்பட்டி | 100 | 70 | 170 |
| | **மொத்தம்** | **100** | **70** | **170** |

எனவே, மேற்கண்ட விபரப்படி 170 மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களை DBC பணியாளர்களாக 01.10.2025 முதல் 28.12.2025 முடிய 89 நாட்களுக்கு அல்லது அதற்கு முன்பாக தேவைப்படும் காலம் வரையிலோ பணியமர்த்தவும், அவர்களுக்கு ஊதியமாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 01.04.2024 முதல் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.473/-வீதம் வழங்கிடவும், ஊதியம், தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதி (EPF) மற்றும் காப்பீட்டுறுதி சந்தா தொகை (ESI) ஆகியவற்றின் பணி வழங்குவோர் பங்களிப்புத் தொகை ஆகியவை உள்ளடங்கி பணியாளர் ஒருவருக்கு நாள் 1-க்கு ரூ.550/- வீதம் 89 நாட்களுக்கு 170 பணியாளர்களுக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.83.25 இலட்சத்திற்கான செலவினத்தை அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்தின் மூலம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>:

அனுமதிக்கலாம்.

**(எப்2/4872/2025)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**5)** நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் 09.10.2017 ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நோய்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக ஏடிஸ் கொசுக்களை கட்டுப்படுத்துதல், கொசு புழுக்களை கண்டறிந்து அழித்தல் போன்ற டெங்கு நோய் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ள 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் இம்மாநகராட்சிக்கு மொத்தம் 700 DBC பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய காலங்களில், நோய் தாக்கத்தின் தன்மைக்கேற்ப தேவையான எண்ணிக்கையில் DBC பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு வருகிறது.

தற்போது வடக்கிழக்கு பருவமழை தொடங்கிவுள்ளதாலும் மழை காலத்தில் நீர் தேங்கி அதிக அளவில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாக வாய்ப்புள்ளது. எனவே, மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்திட கீழ்கண்ட விபரப்படி அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்கு 100 எண்ணிக்கையிலான பணியாளர்கள் வழக்கமான தினசரி அட்டவணைப்படி கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளவும், கோட்டத்திற்கு தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 80 பணியாளர்களை கொண்டு அமைக்கப்பட்ட 16 விரைவு குழுக்கள் பொது இடங்கள், வணிக நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் முக்கிய நோய் பரவக்கூடிய பகுதிகளில் (Hot spot) குழுவாக இணைந்து சிறப்பு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், மொத்தம் 180 DBC பணியாளர்களை 01.10.2025 முதல் 28.12.2025 முடிய 89 நாட்களுக்கு அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட பகுதிகளில் பணிகளை மேற்கொள்ள பணியமர்த்த வேண்டியது அவசியமாகிறது.

தொடர்ச்சி.,

| வ.எண். | வார்டு அலுவலகம் | வழக்கமன கொசு ஒழிப்புபணி பணியாளர்கள் | விரைவு குழு பணியளர்கள் | மொத்த DBC பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | அம்மாபேட்டை | 100 | 80 | 180 |
| | **மொத்தம்** | **100** | **80** | **180** |

எனவே, மேற்கண்ட விபரப்படி 180 மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களை DBC பணியாளர்களாக 01.10.2025 முதல் 28.12.2025 முடிய 89 நாட்களுக்கு அல்லது அதற்கு முன்பாக தேவைப்படும் காலம் வரையிலோ பணியமர்த்தவும், அவர்களுக்கு ஊதியமாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 01.04.2024 முதல் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.473/-வீதம் வழங்கிடவும், ஊதியம், தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதி (EPF) மற்றும் காப்பீட்டுறுதி சந்தா தொகை (ESI) ஆகியவற்றின் பணி வழங்குவோர் பங்களிப்புத் தொகை ஆகியவை உள்ளடங்கி பணியாளர் ஒருவருக்கு நாள் 1-க்கு ரூ.550/- வீதம் 89 நாட்களுக்கு 180 பணியாளர்களுக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.88.11 இலட்சத்திற்கான செலவினத்தை அம்மாபேட்டை வார்டு அலுவலகத்தின் மூலம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>:

அனுமதிக்கலாம்.

**(எப்2/4873/2025)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

6) நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் 09.10.2017 ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நோய்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக ஏடிஸ் கொசுக்களை கட்டுப்படுத்துதல், கொசு புழுக்களை கண்டறிந்து அழித்தல் போன்ற டெங்கு நோய் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ள 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் இம்மாநகராட்சிக்கு மொத்தம் 700 DBC பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய காலங்களில், நோய் தாக்கத்தின் தன்மைக்கேற்ப தேவையான எண்ணிக்கையில் DBC பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு வருகிறது.

தற்போது வடக்கிழக்கு பருவமழை தொடங்கிவுள்ளதாலும் மழை காலத்தில் நீர் தேங்கி அதிக அளவில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாக வாய்ப்புள்ளது. எனவே, மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்திட கீழ்கண்ட விபரப்படி கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு 100 எண்ணிக்கையிலான பணியாளர்கள் வழக்கமான தினசரி அட்டவணைப்படி கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளவும், கோட்டத்திற்கு தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 80 பணியாளர்களை கொண்டு அமைக்கப்பட்ட 16 விரைவு குழுக்கள் பொது இடங்கள், வணிக நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் முக்கிய நோய் பரவக்கூடிய பகுதிகளில் (Hot spot) குழுவாக இணைந்து சிறப்பு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், மொத்தம் 180 DBC பணியாளர்களை 01.10.2025 முதல் 28.12.2025 முடிய 89 நாட்களுக்கு கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட பகுதிகளில் பணிகளை மேற்கொள்ள பணியமர்த்த வேண்டியது அவசியமாகிறது.

தொடர்ச்சி.,

| வ.எண். | வார்டு அலுவலகம் | வழக்கமன கொசு ஒழிப்புபணி பணியாளர்கள் | விரைவு குழு பணியளர்கள் | மொத்த DBC பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | கொண்டலாம்பட்டி | 100 | 80 | 180 |
| | **மொத்தம்** | **100** | **80** | **180** |

எனவே, மேற்கண்ட விபரப்படி 180 மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களை DBC பணியாளர்களாக 01.10.2025 முதல் 28.12.2025 முடிய 89 நாட்களுக்கு அல்லது அதற்கு முன்பாக தேவைப்படும் காலம் வரையிலோ பணியமர்த்தவும், அவர்களுக்கு ஊதியமாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 01.04.2024 முதல் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.473/-வீதம் வழங்கிடவும், ஊதியம், தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதி (EPF) மற்றும் காப்பீட்டுறுதி சந்தா தொகை (ESI) ஆகியவற்றின் பணி வழங்குவோர் பங்களிப்புத் தொகை ஆகியவை உள்ளடங்கி பணியாளர் ஒருவருக்கு நாள் 1-க்கு ரூ.550/- வீதம் 89 நாட்களுக்கு 180 பணியாளர்களுக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.88.11 இலட்சத்திற்கான செலவினத்தை கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்தின் மூலம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>:**

அனுமதிக்கலாம்.

**(எப்2/4874/2025)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**7)** சேலம் மாநகராட்சியில் உள்ள 16 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் ஏற்கனவே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத்தின் மூலமாக அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில், காலிப் பணியிடங்களுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் சுகாதாரப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய அவசியம் கருதி, 7 மருந்தாளுநர்களை 01.07.2025 முதல் 30.09.2025 வரையுள்ள 3 மாத காலத்திற்கு பயிற்சியில் ஈடுபடுத்தி பயிற்சி ஊக்கத் தொகை வழங்க மாமன்ற தீர்மானம் எண்.195 நாள்:27.06.2025 ல் அனுமதிக்கப்பட்டது. தற்போது கீழ்கண்ட விபரப்படி மருந்தாளுநர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளது.

| வ. எண். | பணியிடங்களின் விபரம் | பணியிட அனுமதி | பணியில் உள்ளவர்கள் | மொத்த காலி பணியிடம் |
|---|---|---|---|---|
| 1. | மருந்தாளுநர்கள் | 16 | 9 | 7 |

எனவே மேற்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலிப் பணியிடங்களுக்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி, பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகளை தங்குதடையின்றி வழங்கிட ஏதுவாக தகுதியான படிப்பு முடித்தவர்களை பின்வரும் அட்டவணையில் கண்டுள்ளபடி தேசிய நகர் குழும தொகுப்பூதிய விகிதங்களின்படி உத்தேச மாத செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மேற்கண்ட காலிப் பணியிடங்களை பூர்த்தி செய்யப்படும் வரை அல்லது 01.10.2025 முதல் 31.12.2025 வரை பணியில் ஈடுபடுத்தி அதற்கு பயிற்சி ஊக்கத் தொகை வழங்க வேண்டியுள்ளது.

தொடர்ச்சி.,

| வ. எண் | காலிப்பணியிட விபரம் | தேவையான பணியாளர்கள் எண்ணிக்கை | மாதாந்திர ஊக்கத்தொகை ரூ. | அனுமதிக்கப்படும் காலம் |
|---|---|---|---|---|
| 1. | மருந்தாளுநர்கள் | 07 | 14000 | 01.10.2025 முதல் 31.12.2025 வரை |

**மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு 7 மருந்தாளுநர்கள், ஆகியோரை 01.10.2025 முதல் 31.12.2025 வரையுள்ள 3 மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்த அனுமதிக்கவும், அவர்களுக்கு மாதாந்திர பயிற்சி ஊக்கத் தொகையை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு:–**

**அனுமதிக்கலாம்.**

(எப்3/7813 /2022)

**தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.**

**8)** சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் சம்மந்தப்பட்ட புதிய பேருந்துநிலையம் அருகில் உள்ள காலியிடத்தில் ப்ரீத்தி எண்டர்டைய்ன்மெண்ட்நிறுவனத்தாரின் **04.06.2025** ஆம் தேதிய விண்ணப்பத்தில்**19.12.2025** முதல் **01.02.2026** வரை **45** நாட்களுக்கு தனியார் பொழுதுபோக்கு பொருட்காட்சி மற்றும் குழந்தைகள் விளையாட்டுத் திடல் அமைத்தும், ராட்டினங்கள் அமைத்தும், பொருட்காட்சி நடத்துவதற்கு அனுமதிக்குமாறும், அதற்காக நிர்ணயிக்கும் வாடகை தொகை மற்றும் இதர தொகைகளை செலுத்தி விடுவதாகவும் தெரிவித்து, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் **2023**, வி எண்.**300**இன் கீழ் படிவம்–**8**ஐ சமர்ப்பித்துள்ளார்.

அதனடிப்படையில் சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் சம்மந்தப்பட்ட புதிய பேருந்துநிலையம் கிழபுறம் உள்ள காலியிடத்தில் **19.12.2025** முதல் **01.02.2026** வரை **45** நாட்களுக்கு தனியார்பொழுதுபோக்கு பொருட்காட்சியை நடத்துவதற்கு, **14000** சதுரடி அளவுள்ள காலியிடத்திற்கு முன்வைப்புத்தொகை ரூ.2,00,000/– மற்றும் வாடகை தொகையாக சதுரடி ஒன்றுக்கு ரூ.**3/–** வீதம் **(14000 * 3 = 42000)** நாள் ஒன்றுக்கு ரூ.**42,000/– (42000*45=18,90,000)** வீதம் ரூ.**18,90,000/–** எனநிர்ணயம் செய்தும், தனியார் பொழுதுபோக்கு பொருட்காட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை தொகை நாள் ஒன்றுக்கு ரூ.**2000/–** வீதம் **(45*2000=90000/–)** என நிர்ணயம் செய்தும், தொடர்புடைய துறைகளிடமிருந்து தடையின்மை சான்று பெற்று சமர்ப்பித்து உரிமம் பெற்றுக்கொள்ள விண்ணப்பதாரருக்கு அறிவிப்பு வழங்கியும், உரிமம் வழங்க தொடர் நடவடிக்கை மேற்கொண்டமையும் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(கே1 / 2399 / 2025)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

9) சேலம் மாநகராட்சி 2024-25 ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானிய நிதியின் கீழ் சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண் 28 இல் நரசிம்மன் சாலையில் உள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளியில் சமையலறையுடன் கூடிய இருப்பு அறை With Sump (UCI) கட்டும் பணிக்கு 2024-25 ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 13.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.21616 /SS2, நாள்: 10-09-2024 இல் நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில் மேற்படி பணிக்கு 03-10-2024 இல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் மதிப்பீடு தொகைக்கு 0.03% குறைவு என வரப்பெற்ற M/s Shri Sakthi Construction, Salem என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.10,88,219.00/-ஐ ஏற்று சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.432 நாள்: 25-10-2024 இல் அனுமதிக்கப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டது.

இப்பணியினை மேற்கொள்ளும்போது பணியிடங்களில் ஏற்பட்ட தள அளவுகளின் மாற்றங்களின் காரணமாகவும், வடிவமைப்பு காரணமாகவும், இடத்தின் தன்மைகேற்ப சில இனங்கள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள உள்ள அளவுகளை விட கூடுதலாக பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு பணிகள் மேற்கொண்டதிற்க்கான கூடுதல் அளவுகளும், அதற்கான செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Earth work excavationft | 48.00 | 10362.00 | 64.25 | 13878.00 | 3516.00 |
| 2 | Plain cement concrete 1:4:8 | 4.50 | 23283.00 | 7.31 | 37785.39 | 14502.39 |
| 3 | Supplying and errecting centering to sides a | | | | | |
| | b). Centering for Plain surface | 87.00 | 99799.00 | 97.44 | 111666.24 | 11867.24 |
| 4 | Supply and fabrication and placing in position of TMT steel rods | 1700.00 | 155652.00 | 1802.37 | 165818.04 | 10166.04 |
| 5 | Providing and laying in position Standardised Concrete Mix M-20 Grade | | | | | |
| | b). Column Upto 4.50m height - GF | 4.00 | 33445.00 | 8.00 | 66824.00 | 33379.00 |
| 6 | Brick Work in Cement Mortar 1:5 Mix | | | | | |
| | a). Foundation Basement | 2.00 | 13367.00 | 10.46 | 69841.42 | 56474.42 |

தொடர்ச்சி.,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | Special Ceiling Plastering for RCC slabs and beams with cement mortar 1:3 mix 10mm thick | 21.00 | 6747.00 | 23.35 | 7495.35 | 748.35 |
| 8 | Plastering with cement mortar 1:5 mix, 12mm thick | 106.00 | 29510.00 | 218.54 | 60754.12 | 31244.12 |
| 9 | UPVC Ventilator | 0.50 | 4053.00 | 1.61 | 13037.78 | 8984.78 |
| 10 | Flooring with Stain free Nano polish Vetrified flooring tiles | 12.00 | 18120.00 | 17.99 | 27128.92 | 9008.92 |
| 11 | White washing two coats | 21.00 | 811.00 | 38.51 | 1501.89 | 690.89 |
| 12 | Supplying and laying Rubberised interlocking Paver block M40 grade 83mm thick | 6.00 | 6137.00 | 61.18 | 62525.96 | 56388.96 |
| 13 | Wiring with 2 x 1.5 sqmm (22 / 0.3) PVC light point / Fan point (For electronic regulator). | 6.00 | 20184.00 | 7.00 | 23527.00 | 3343.00 |
| 14 | Supply and fixing of single box type 4'40 W flu fitting | 4.00 | 2752.00 | 5.00 | 3435.00 | 683.00 |
| 15 | Supply and fixing of 1200 mm (48") AC ceiling fan | 1.00 | 2666.00 | 2.00 | 5326.00 | 2660.00 |
| 16 | Supplying and fixing in position best quality P.V.C soil/ waste pipes (6KSC) | | | | | |
| | 110mm dia | 15.00 | 7205.00 | 18.30 | 8784.00 | 1579.00 |
| 17 | Supply and fixing of M.S Grills with Doors and Windows | 167.00 | 17887.00 | 258.64 | 27674.48 | 9787.48 |
| | **Total** | | **451980.00** | | **707003.59** | **255023.59** |

மேற்படி அட்டவணையில் கண்டுள்ள கூடுதல் அளவு பணிகள் ஒப்பந்த தொகைக்கு மிகாமல் அசல் மதிப்பீட்டு தொகை ரூ.13.00 இலட்சத்திற்குள் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணிக்கான செலவின தொகை ரூ.2,55,023.59/- என கணக்கிடப்பட்டுள்ளது. இச்செலவின தொகை அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள பிற இனங்கள் தள அமைப்பின் படி செயல்படுத்தப்படும் அளவுகளின் சேமிப்பு தொகையில் சரிசெய்ய வழிவகை உள்ளதாலும், அவசிய மாற்றங்களுடன் அசல் மதிப்பீட்டிற்குள் மேற்படி பணி மேற்கொண்டதற்கு மன்ற அனுமதி வேண்டியும், இப்பணிக்கான செலவு தொகை ரூ.2,55,023.59/-ஐ ஏற்கவும், M/s Shri Sakthi Construction Salem. என்ற நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பின்னேற்பு வழங்கி அனுமதிக்கலாம்.

**(E3/ Est No.6/ B / 2024-25)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

10) சேலம் மாநகராட்சி 2024-25 ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானிய நிதியின் கீழ் சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண் 22 இல் போடி நாயக்கன்பட்டி மாநகராட்சி துவக்கப்பள்ளியில் BT உதவியாளர் அறை மற்றும் புதியதாக சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு 2024-25 ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.19.50 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.21616 /SS2, நாள்: 10-09-2024 இல் நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில் மேற்படி பணிக்கு 03-10-2024 இல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் மதிப்பீடு தொகைக்கு 0.08% குறைவு என வரப்பெற்ற Thiru. A. Annadurai, Salem. என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.16,32,700.50/-ஐ ஏற்று சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.432 நாள்:25.10.2024 இல் அனுமதிக்கப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டது.

இப்பணியினை மேற்கொள்ளும்போது பணியிடங்களில் ஏற்பட்ட தள அளவுகளின் மாற்றங்களின் காரணமாகவும், வடிவமைப்பு காரணமாகவும், இடத்தின் தன்மைகேற்ப சில இனங்கள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள உள்ள அளவுகளை விட கூடுதலாக பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு பணிகள் மேற்கொண்டதிற்க்கான கூடுதல் அளவுகளும், அதற்கான செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எ ண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Earth work excavation for foundation | | | | | |
| | Narrow Foundation | 22.00 | 4749.40 | 38.76 | 8372.16 | 3622.76 |
| 2 | Collection,supply and filling of CS sand | 6.00 | 9330.86 | 7.25 | 11273.75 | 1942.89 |
| 3 | Plain cement concrete 1:4:8 mix | 6.00 | 31029.91 | 8.29 | 42892.46 | 11862.55 |
| 4 | Supplying and errecting centering to sides and soffits | | | | | |
| | Plain Surface | 94.00 | 107833.39 | 128.67 | 147584.49 | 39751.10 |
| 5 | Providing and laying in position, Concrete Mix M-20 Grade | | | | | |
| | Foundation Basement | 5.50 | 45215.81 | 14.88 | 122343.36 | 77127.55 |
| 6 | Supply and fabrication and placing in position of TMT steel rods | 2220.00 | 203263.07 | 2512.08 | 229855.32 | 26592.25 |
| 7 | Manufacturing supplying and fixing of MILD STEEL Window | 4.50 | 18903.11 | 6.21 | 26057.16 | 7154.05 |

தொடர்ச்சி.,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | Collection,supply and filling of Well gravel | 22.00 | 7186.08 | 45.82 | 14937.32 | 7751.24 |
| 9 | Flooring with Vetrified flooring tiles | 37.00 | 55869.40 | 38.08 | 57424.64 | 1555.24 |
| 10 | Painting two coats with ready mixed plastic emulsion paint | 267.00 | 69045.63 | 351.69 | 90736.02 | 21690.39 |
| 11 | Painting two coats with best synthetic enamel paint | 18.00 | 2731.92 | 26.48 | 4024.96 | 1293.04 |
| 12 | Wiringwith2x1.5sq.mm.(22/0.3)PV Clight/fanpoint(for electronic regulator) (5 points per coil) (SD-23) | 6.00 | 20184.00 | 12.00 | 40320.00 | 20136.00 |
| 13 | Supply and fixing of 1200mm 48' AC ceiling fan | 2.00 | 5332.00 | 4.00 | 10652.00 | 5320.00 |
| 14 | Supply and fixing of single box type 4'x18w crystal glass LED Tube light | 4.00 | 2752.00 | 6.00 | 4122.00 | 1370.00 |
| 15 | Supplying and laying Rubberised interlocking Paver block M40 grade | 10.00 | 10228.00 | 89.92 | 91898.24 | 81670.24 |
| 17 | Supply and fixing of M.S Grills with Doors and Windows | | | 230.85 | 24705.57 | 24705.57 |
| 18 | Dewatering using 3HP to 70HP diesel engine pumpset | | | 46.75 | 22579.78 | 22579.78 |
| | **Total** | | **593654.58** | | **949779.23** | **356124.65** |

மேற்படி அட்டவணையில் கண்டுள்ள கூடுதல் அளவு பணிகள் ஒப்பந்த தொகைக்கு மிகாமல் அசல் மதிப்பீட்டு தொகை ரூ.19.50 இலட்சத்திற்குள் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணிக்கான செலவின தொகை ரூ.**3,56,124.65**/- என கணக்கிடப்பட்டுள்ளது. இச்செலவின தொகை அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள பிற இனங்கள் தள அமைப்பின் படி செயல்படுத்தப்படும் அளவுகளின் சேமிப்பு தொகையில் சரிசெய்ய வழிவகை உள்ளதாலும், அவசிய மாற்றங்களுடன் அசல் மதிப்பீட்டு தொகை ரூ.19.50 இலட்சத்திற்குள் பணி மேற்கொண்டதற்கு மன்ற அனுமதி வேண்டியும், இப்பணிக்கான செலவு தொகை ரூ.**3,56,124.65**/-ஐ ஏற்கவும், Thiru. A. Annadurai, Salem. என்பவருக்கு வழங்கிடவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(E3/ Est No.5/ B / 2024-25)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**11)** சேலம் மாநகராட்சி 2024-25 ஆம் ஆண்டு நகரப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) நிதியின் கீழ் அம்மாபேட்டை மண்டல அலுவலகம் கோட்டம் எண் 41, 42, 43, மற்றும் 44 ஆகிய கோட்டங்களுக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளினால் சேதமடைந்த சாலைகளை மறு சீரமைப்பு செய்யும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.188.50 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2459/2024/SS1, நாள்: 01-02-2024 நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில் கீழ்க்காணும், **(1)** கோட்டம் எண் 40 இல் கிருஷ்ணா நகர் குறுக்கு தெரு 1 முதல் 5 வரை, **(2)** கிருஷ்ணா நகர் மேற்கு குறுக்கு தெரு எண் 1 முதல் 4 வரை, **(3)** ராமர் கோவில் தெரு, **(4)** குறிஞ்சி நகர் கிழக்கு குறுக்கு தெரு, **(5)** கோட்டம் எண் 42 இல் களரம்பட்டி மெயின் ரோடு, **(6)** கடம்பூர் முனியப்பன் கோவில் தெரு, **(7)** சன்னியாசி குண்டு எக்ஸ்டன்சன் தெற்கு குறுக்கு, **(8)** கோட்டம் எண் 44 இல் களரம்பட்டி மெயின் ரோடு (எருமாபாளையம் சாலை முதல் கைலாஷ் பிரகாஷ் தியேட்டர் வரை), **(9)** எஸ்.எம்.சி காலனி, 7th Day School சாலை, **(10)** தேசிய புனரமைப்பு காலனி 6 வது குறுக்கு தெரு, ஆகிய 10 இடங்களில் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் **(1)** கோட்டம் எண் 41 இல் நெம்பர் 2 குமரன் நகர் குறுக்கு சந்து (ராஜவாய்க்கால் சந்து), **(2)** சத்திய மூர்த்தி கிழக்கு குறுக்கு தெரு, **(3)** நெம்பர் 2 குமரன் நகர் குறுக்கு சந்து ( ராமசுந்தரம் தெரு பின்புறம்), **(4)** அண்ணா தெரு கிழக்கு குறுக்கு சந்து, **(5)** கோட்டம் எண் 42 இல் பூர்ணாத்தாள் காம்பவுண்ட் சந்து, **(6)** ( சன்னியாசி குண்டு மெயின் ரோடு குறுக்கு சந்து) ஆகிய 6 இடங்களில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி (சிப்பம் எண்.11) மேற்காணும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.188.50 இலட்சத்திற்கு 23.02.2024 இல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் மதிப்பீடு தொகைக்கு 0.03% குறைவு என வரப்பெற்ற திரு. பி. முத்துவேல், திருவாரூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,58,00,023.39/-ஐ ஏற்று சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.13 நாள்:21.06.2024 இல் அனுமதிக்கப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டது.

மேற்படி பணிகளில் கான்கிரீட் சாலை அமைக்க மதிப்பீட்டில் PCC 1:4:8 mix Base Layer அமைத்து PCC 1:1:5:3 mix Top Layer அமைக்க மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி கான்கிரீட் சாலை அமைக்கப்படவுள்ள சாலைகள் செயற்பொறியாளர் அவர்களால் 23.05.2025 இல் நேராய்வு செய்த போது PCC 1:4:8 mix Base Layer பதிலாக Wet mix Macadam (WMM) Base Layer அமைக்க அறிவுரை வழங்கியதின் பேரில், கான்கிரீட் சாலைகளுக்கு Wet mix Macadam (WMM) Base Layer அமைத்து PCC 1:1:5:3 mix Top Layer கான்கிரீட் சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி.,

